சிறப்பு நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்

அ.வ.எண். 3/2020
நாள் : 22.07.2025

பி.வா.சா.1 – கோவிந்தசாமி
<u>3 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

6 ஆம் வாதி என்னுடைய தந்தையின் 2 ஆம் தாரத்தின் மகன் என்றாலும், எனக்கு சகோதரர் முறை என்றாலும் சரிதான். நான் கான்வன்டில் படித்தேன் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி எனது தந்தையின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை உண்டு என்றால் இல்லை. அ.வ எண்.6/2020 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதில் நான் போட்ட மனு தள்ளுபடியாகிவிட்டது. மேற்படி வழக்கானது 2 ஆம் பிரதிவாதி அலமேலு போட்ட வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. 3 ஆம் பிரதிவாதி எனது அக்கா என்றால் சரிதான். நானும் அவரும் ஒரே கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். எனக்கும் எனது சகோதரிக்கும் பேச்சு வார்த்தை உண்டு என்றால் சரிதான். எனது தந்தை வழி பாட்டன் பெயர் கோவிந்தபடையாட்சி என்றால் சரிதான். அவருக்கு 3 தாரம் என்றால் சரிதான். எனது தந்தைக்கும் 3 தாரம் என்றால் சரிதான். 1 ஆம் வாதி, 2 ஆம் பிரதிவாதி கோவிந்த படையாடசியின் 3 ஆம் தாரத்தின் பிள்ளைகள் என்றால் சரிதான். 6 ஆம் வாதி, 1 ஆம் வாதியின் 2 ஆம் தாரத்தின் மகன் என்றால் சரிதான். மற்ற வாதிகள் 3 ஆம் தாரத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது சகோதரியான 3 ஆம் பிரதிவாதி சரஸ்வதி அசல் வழக்கு 52/1987 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு என்னுடைய தந்தை ஒரு தரப்பினர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். அப்போது நான் மைனராக இருந்ததால் எனது தந்தை என்க்காக வழக்கு நடத்தினார்.

52/1987 வழக்கில் தீர்ப்பாணை பிறபிக்கப்பட்டு நானும், எனது தந்தையும் எனது அக்காவும், அந்த வழக்கில் கண்ட சொத்துக்களில் தலா 3 பாகமாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு கிடைத்த 1/3 பாகம் விற்றுவிட்டேன் என்றால் சரிதான். என் செலவிற்காக விற்றுவிட்டேன். அரியலூர் நீதிமன்றத்தில் நான் அசல் வழக்கு

எண்.117/1991 என்ற பாக வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்ட சில சொத்தும், இந்த வழக்கில் உள்ள சொத்தும் ஒரே சொத்து தான் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.117/1991 வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.117/1991 வழக்கின் தீர்ப்பாணையின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இ.ம எண்.4/2023 மனுவில் தாக்கல் செய்த ஆவணங்களை குறியீடு செய்யாததற்கு என்ன காரணம் என்றால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் கண்ட சொத்துக்களில் 2,3, 16 முதல் 19 அயிட்ட சொத்துகளின் பட்டா 1ஆம் வாதியின் 3வது மனைவி காந்தி பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2, 3, 16 முதல் 19 அயிட்ட சொத்துக்களுக்கான கிரையங்கள் காந்தி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மற்ற சொத்துக்களுக்கான பட்டா தனிப்பட்டாவாக என்னுடைய தந்தை ராஜமாணிக்கம், பெயரல் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.